| Article Date | Headline / Summary | Publication |
|---|---|---|
| 17 Apr 2026 | வீட்டுக் காப்பீடு எடுக்கும்போது இந்த 10 விஷயங்களையும் தவறாமல் கவனியுங்கள்! | Vikatan |

## வீட்டுக் காப்பீடு எடுக்கும்போது இந்த 10 விஷயங்களையும் தவறாமல் கவனியுங்கள்!



மரச்சாமான்கள், மின்சாதனங்கள் போன்றவற்றுக்கு காப்பீடு இருப்பது பொதுவானது. ஆனால், தங்க நகைகள், ஓவியங்கள், வெள்ளிப் பொருள்கள் போன்ற உயர்மதிப்புள்ள

பொருள்களை ஒப்புக்கொள்ளப்பட்ட மதிப்பு அடிப்படையில் காப்பீடு செய்யும் வசதி இந்த பாலிசியில் உள்ளது!

குர்தீப் சிங் பத்ரா, Head – Property UW, Risk Engineering, Global Accounts and Coinsurance, பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட்

வீட்டை பிரமாண்ட மாகக் கட்டுபவர்கள் பலரும், அதைப் பாதுகாக்க சரியான காப்பீட்டை எடுக்க வேண்டும் என நினைப்பதில்லை. அப்படியே வீட்டுக் காப்பீடு (Home Insurance) எடுப்பவர்களில் பெரும்பாலானோரும் தீ, திருட்டு, இயற்கை சீற்றங்களான பூகம்பம், மழை, புயல் போன்ற பொதுவான அபாயங்களையே கவனத்தில் கொள்கிறார்கள். ஆனால், இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (Insurance Regulatory and Development Authority of India - IRDAI) அறிமுகப்படுத்தி உள்ள 'பாரத் கிரிஹ ரக்ஷா பாலிசி' (Bharat Griha Raksha Policy), அடிப்படை பாதுகாப்புகளைவிட பல விரிவான அம்சங்களை வழங்குகிறது. இந்தப் பாலிசியை அனைத்துப் பொதுக் காப்பீட்டு நிறுவனங்களும் பாலிசிதாரர்களுக்கு வழங்க வேண்டும் என்பது கட்டாய விதிமுறை.